
# ஒரு பிடி சோறு

சன்மார்க்க சபை
1934
குரும்பசிட்டி



இரசிகமணி
கனக. செந்திநாதன்

26

[illegible]
੧੯੩੪

1034

# ஒரு பிடி சோறு

(நாடகம்)

இரசிகமணி கனக. செந்திநாதன்

வெளியீடு

நீர்கொழும்பு இலக்கிய வட்டம்

# ஒரு பிடி சோறு

(நாடகம்)

இரசிகமணி கனக. செந்திநாதன்

முதல் பதிப்பு: டிசம்பர் 1976

பதிப்புரிமை: ஆசிரியர் (c)

விலை 2/50

அச்சகம்;

சாந்தி அச்சகம்
நீர்கொழும்பு.

வெளியீடு:

நீர்கொழும்பு இலக்கிய வட்டம்
20, சூரிய வீதி,
நீர்கொழும்பு.

சன்மார்க்க சபை
1934
குரும்பசிட்டி

## பதிப்புரை

நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தின் இரண்டாவது வெளியீடாக பிரபல எழுத்தாளர் இரசிகமணி கனக.செந்தி நாதன் அவர்கள் எழுதிய 'ஒரு பிடி சோறு' என்னும் இந்நாடக நூல் வெளிவருகிறது. இரசிகமனியின் 60வது வயது நிறைவில் இந்நூல் வெளிவருவது குறித்து நாம் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

நீர்கொழும்பூர் அன்பர்களும், எழுத்தாளர்களும் இந்நூலை வெளியிட நமக்கு ஆதரவு நல்கினார்கள். இலக்கியத்திற்காக தன்னை, தன்வாழ்வை அர்ப்பணித்து- இன்றும் இலக்கியவாதியாக வாழ்ந்துவரும் ஓர் எழுத்தாளனை அவன் வாழும் காலத்திலேயே வாழ்த்தி ஆதரிக்க வேண்டும் என்ற உன்னதமான பண்பினை, இச்செயல்பாட்டின் மூலம் இலக்கிய உலகிற்கு உணர்த்தினார்கள் அவ் அன்பர்களும், எழுத்தாளர்களும்.

இந்நூலை வெளியிட நமக்கு அனுமதி தந்த கனக செந்தி அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துவதோடு இந்நூல் வெளிவர நமக்கு ஒத்துழைத்த அன்பர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம். எமது பணிக்கு ஆக்கபூர்வமான முறையில் உதவிய நண்பர்கள் இ. வரதன், ஐ. சாந்தன், சாந்தி அச்சக சு. நவரத்தினராசா மற்றும் அங்கு கடமையாற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.

லெ. முருகபூபதி

நீர்கொழும்பு இலக்கிய வட்டம்
7-12-76

# முன்னுரை

1967ம் ஆண்டில் இலங்கை வானொலி ஈழத்திலுள்ள நாடக மன்றங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. நாடக மன்றங்கள் தாங்களாகவே கதை வசனம் எழுதி நாடகத்தையும் தயாரித்து - முழுப்பொறுப்பையும் ஏற்று ஒலிபரப்பலாம் நல்லன ஏற்றுக்கொள்ளப்படும் என்பதுதான் அந்த அறிவித்தல். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய கே. கே. வி. செல்லையா அவர்கள் தமது கவின்கலை மன்றத்தின் சார்பாக ஒரு நாடகத்தை ஒலிபரப்ப விரும்பினர். அவர் என்னை அதற்காக ஒரு வானொலி நாடகம் இரண்டு, மூன்று நாட்களில் எழுதித் தருமாறு கேட்டார். அவரது தூண்டுதலால் எழுந்ததே இந்த 'ஒரு பிடி சோறு'.

ஏற்கனவே மூன்று மேடை நாடகங்களையும் சில வானொலி நாடகங்களையும் எழுதிய அனுபவம் எனக்கு இருந்தது. ஆனலும் கே. கே. வி. செல்லையா அவர்கள் நாடகத்துறையில் கைதேர்ந்தவர். ஓவியம் தீட்டுவதில் வல்லவர். நல்ல படப்பிடிப்பாளர். நல்ல கருவும் அதற்கேற்ற வசன நடையும் இல்லாத நாடகங்களை அவர் நாடகமென ஒப்புக் கொள்ள மாட்டார். காலம் குறுகியதாக இருந்தாலும் நல்ல கருப்பொருள் உள்ள கதை ஒன்றை பல வேலைகளுக்கிடையிலே சிந்திக்க முடியாததாலும் எனது 'ஒரு பிடி சோறு' என்ற கதையையே வானொலி நாடகமாக எழுத முற்பட்டேன்.

பிரபல சிறுகதை எழுத்தாளரும் வானொலி நாடக எழுத்தாளரும் ஆகிய இலங்கையர்கோன் அவர்கள் கடற்கரை கிளிஞ்சல் என்ற சிறுகதையை எழுதி விட்டு அதையே ஓர் ஒற்றையங்க நாடகமும் ஆக்கினர். தமிழ் நாட்டு எழுத்தாளராகிய பி. எஸ். இராமையா அவர்கள் தனது சிறுகதை ஒன்றை வானொலி நாடகமாக்கி இரண்டையும் ஒருமித்து வெளியிட்டிருந்தார். அந்த அருட்டுணர்விலேதான் எனது கதையையும் வானொலி நாடகமாக்க முயன்றேன்.

ஒரு சிறுகதை வானொலி நாடக உருவில் வரும்போது எவ்வளவோ மாற்றமடையும். இந்த நாடகமும் கருவில் ஒத்திருந்தாலும் வானொலி நாடக உருவில் எவ்வளவோ மாற்றம் அடைந்திருக்கிறது.

பக்கத்து வீட்டில் இருப்பவன் பசியோடிருக்க அவனை அலட்சியப் படுத்தி விட்டு ஆலயங்களுக்குப் போய் அன்னதானம் செய்வதில் ஒரு புண்ணியமும் இல்லை என்பது நாடகத்தின் கருப்பொருளாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நான்காம் பாலபாடத்தில் இப்படியான தருமங்களைக் கண்டித்து எழுதியும் உள்ளார். இந்தக் கருப்பொருளை மையமாக வைத்து ஏழைகளைச் சுரண்டிக் கொழுக்கும் பணக்காரனின் திமிர், அவர்கள் தம் உயிருக்குப் பயப்படும் தன்மை ஏழைகளுக்கு இருக்கும் தன்மானத் தன்மை ஏழைகளின் பசி ஏழைகளுக்குத்தான் புரியும் என்பது, சாத்திரம் நூல் கட்டல் என்பவற்றின் போலித் தன்மை என்பன எல்லாம் வர இதனை எழுதியிருக்கிறேன். யாழ்ப்பாணக் கிராமத்து மண் வாசனைக்கு ஏற்ப நாடக நடையை ஓரளவு விளங்கிக் கொள்ளக் கூடிய கிராமத்து மொழியிலேயே எழுதியுள்ளேன்.

நான்கு ஆண் பாத்திரங்களும் ஒரு பெண் பாத்திரமும் கொண்டதாக வானொலி நாடகம் அமைய வேண்டும் என்ற அவர்களது கட்டளையின்படி சிறுகதையில் வரும் சீமாட்டியை விட்டு விட்டு கதையை வேறு விதமாக அமைத்திருக்கிறேன். இந் நாடகத்தில் வரும் தரகர் தம்பையா 'சிவோகம்' பண்டாரம் வேலைக்காரச் சொக்கன் என்ற பாத்திரங்கள் எல்லாம் நாடகத்திற்கென படைக்கப் பட்டவையே. அவர்களுடைய தனித்தனிக் குண பாவங்கள் இந் நாடகத்தில் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பது என் எண்ணம்.

வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இந்த நாடகத்தை ஓரளவு திருத்தி மேடை நாடகமாக்கி தரும்படி கே. கே. வி. செல்லையா அவர்கள் கேட்டார்கள் அப்படியே இதை மேடை நாடகமாக்கி வைத்திருந்தேன். இதை மேடையிடுவதன் முன் அவரும் என்னைப் போல் சுகவீனமான நிலையில் படுத்த படுகையாகிவிட்டார். நீர்கொழும்பு எழுத்தாள நண்பர்கள் எனது அறுபதாவது வயது நிறைவு விழாவை கொண்டாடும் சமயத்திலே எனது நூல் ஒன்றையும் வெளியிட விரும்பிக் கேட்டார்கள். வரிசை அறிந்து பழைய எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் மதிக்கும் இந்த எழுத்தாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கி இந்த நாடகத்தை நூலுருவில் வெளியிட சம்மதித்தேன். இது நூலாக வெளிவரும் இச் சமயத்தில் கலைஞர் கே. கே. வி. செல்லையா அவர்களுக்கும், நீர்கொழும்பு இலக்கிய வட்ட நண்பர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

குரும்பசிட்டி
6-12-76

கனக. செந்திநாதன்

# காட்சி - 1

பாத்திரங்கள்: 1 தனபாலசிங்கம்
2 சொக்கன்
3 பொன்னி

கதைநிகழும் இடம்: தனபாலசிங்கம் வீடு

---

தன: (சாய்மனைக்கட்டிலில் சாய்ந்தபடி பத்திரிகை படிக்கிறார்.)

இடிவிழுந்து ஒருவர் மரணம். சாகட்டும் சாகட்டும் ஒரு கூப்பன் அரிசிமிச்சம். பாடசாலைகளில் இட நெருக்கடி. படிச்சுப்படிச்சு வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிப்போச்சு இந்தப்பள்ளிக்கூடங்களையே மூடிவிட்டாலும் பரவாயில்லை... என்ன இன்றைக்கு இந்தப்பத்திரிக்கையிலை ஆமான புதினங்களைக் காணவில்லை... என்ன? குடியேற்றத்திட்டத்தில் காணி அடடே... எங்களுக்கும் காணிதருவாங்களோ என்று பார்ப்போம்.

முல்லைத்தீவுப்பகுதியில் ஒட்டிசுட்டான் என்னும் இடத்தில் இருநூறுகுடும்பங்களைக் குடியேற்றுவதற்குக்காணிக்கச்சேரி விரைவில் நடாத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. குடியேற்றவாசிகளுக்கு இரண்டு ஏக்கர் மேட்டுநிலக்காணியும் இரண்டு ஏக்கர் காடும் கொடுக்கப்படும் அடே! சொக்கா! சொக்கா!!

சொ: (தூரத்தில் இருந்தபடியே) கையிலை வேலையா இருக்கிறேனையா என்ன வேணும்?

தன: பொயிலையும் நெருப்புப்பெட்டியும் கொண்டுவா ஆ... எந்தஇடத்திலைவிட்டனுன்... அவர்கள் வசிப்ப தற்குவீடுகட்டிக்கொள்ள உதவிப்பணம் கொடுக்கப் படும். முதல் இரண்டு வருடங்களுக்குப் பூமி திருத்த வும் பிறசெலவுக்கும் மாதா மாதம் எழுபத்தைந்து ரூபா கொடுக்கப்படும்(பெருமூச்சு)இந்த அரசாங்கத் துக்கு என்ன விசரோ தெரியவில்லை. கிராமங்களிலை இருந்து எல்லாக்கூலியாட்களும் போய்விட்டார்கள் சிலபேர் கரைவலைக்குப்போய்விட்டார்கள். சில பேர் சீமந்துத்தொழிற் சாலைக்கு வேலைக்குப் போய் விட்டார்கள். இன்னும் கொஞ்சப் பேர்தான் இங்கை இருக்கினம். அவங்களையும் குடியேற்றத் திட்டத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டால் எங்களைப்போல பணக்காரர் என்னசெய்யிறது...... இங்கை ஆர் பனைஏறுகிறது? தோட்டம் கொத்து றது? இந்தத்துலா அரக்கக்கூட ஒரு மனிசன்கிடைக்க மாட்டான். அட சொக்கா சொன்னது கேட்க யில்லையோ.

சொக்: வேலை முடிஞ்சுதையா இதோ போயிலைகொண்டு வாறன்.

தன: எப்பபார்த்தாலும் வேலை என்ன வேலைதான் செய்யிறியோ?சாப்பிடுகிற வேலையைத்தவிரவேறை வேலை என்னதான் இருக்கு உனக்கு? வாடா இங்கை கெதியா?

சொக்: (தூரத்திலிருந்து பாடியபடியே வருகிறுன்) ராசா வருவாரென்று ரோசாப்பூ வாங்கி வைச்சேன் ராசா வைக் காணுமலே - இந்த ரோசாப்பூ வாடிப்போச்சே இந்தாங்கையா பொயிலையும் நெருப்புப்பெட்டியும் சுருட்டி கொழுத்தி எறியுங்கோ அதுதானே உங் களுக்கு எந்தநேரமும் வேலை.

தன: என்ரை வேலை எனக்குத் தெரியும். ஆனா உன்ரை போக்குத்தான் இப்ப கொஞ்சநாளாய் எனக்குப் புரியவில்லை எப்பபார்த்தாலும் ராசா வருவாரென்று பாடினபடியே இருக்கிறியே என்ன சங்கதி?

சொக்: ஐயா சொல்ல வெக்கமாயிருக்கு எனக்கு ஒரு கலியாணம் செய்து வைக்க என்ரை ஆச்சி ஆசைப்படுரு. அதை நினைக்க முந்திப்பார்த்த சினிமாப்பாட்டு ஞாபகத்துக்கு வருகுது.

தன: அட என்மன்மத ராசா உனக்குமொரு கல்யாணமே வேலைக்காரனுக்கு என்னடா கல்யாணம் நீ வாங்குகிற சம்பளத்திலை மனுசியை வைச்சு காப்பாத்துவியே. இங்கை பாரடா என்ரை மகளுக்கு ஒரு லட்சம் ரூபா காசும் பரந்தனிலை முப்பது ஏக்கர் காணியும் கொழும்பிலை ஒரு வீடும் கொடுத்து ஒரு டாக்குத்தரை மாப்பிள்ளையாய் எடுத்தனல்லே. இப்ப என்ன நடக்குது? அவற்றை சம்பளம் குடும்பம் நடத்தக்கால்தூசுக்கும் காணவில்லை மாசா மாசம் இருநூறோ முன்நூறோ நான்தான் அனுப்ப வேண்டியிருக்கு அவை பாடே அப்பிடி எண்டால் இருபத்தைஞ்சு ரூபா சம்பளம் வாங்குகிற நீ எப்பிடிச் சரிக் கட்டப்போருய். அந்த ஆசையை விட்டிடடா.

சொக்: நீங்க சொல்லுறது சரிதானையா. என்ன செய்யிறது? நான் விட்டாலும் மனது கேட்டால் தானே. எனக்கொரு ஐமிச்சம் ஐயா உங்களைப்போன்ற பணக்காரரட்டை பணம் வந்து குவிஞ்சுட்டுது. நிலம் வந்து சேர்ந்து வீட்டது வீடுவாசல் நிலம் புலம் எல்லாம் உங்களுக்கு. கலியாணம் கூட ஏழைகளுக்கு இல்லை. பணக்காரருக்குத்தான்... அல்லாட்டில்......

(நாய்குரைக்கும் சப்தம்)

தன: (மெதுவாக) சொக்கா, படலையிலை நாய் குரைக்குது போய்ப்பாரடா ஆரென்று. ஆரேன் பிச்சைக்கார ரென்ருல் ஐயா வீட்டிலை இல்லையென்று சொல்லி அனுப்பிவிடு. ஆரேன் பெரிய மனிசரென்ருல் வரவிடு. ஓடு படலைக்கு ஓடடா பிச்சைக் காறற்றை தொல்லை பெரிய தொல்லை.

சொக்: ஐயா ஐயா அது எங்கடை பொன்னி.

பொன்: (வந்துகொண்டே) நயினர்த்தம்பி, நயினர்த்தம்பி உன்னட்டைத்தான் ஒரு அலுவலாய் வந்தனன்.

தன: என்னசங்கதி பொன்னி வந்தது? உன்னேடை பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.

பொன்: ஒரு பத்து ரூபா உங்களட்டை வாங்கிவரச்சொல்லி என்ரை மகன் நல்லான் சொன்னன்... அதுதான்....

தன: மாதம் மாதம் தான் அவன்ரை சம்பளத்தை நான் உனக்குத்தந்து விட்டேனே. பிறகு பின்னை என்று நீ என்னிடம் மிச்சம் விடவில்லை. இப்பவந்து நிற் கிருய். இங்கை என்னபணம் கொட்டியா கிடக்கு?

பொன்: இல்லை நயினர். அவன் காய்ச்சலிலை வந்துபடுத்துக் கிடக்கிருன். உங்கடை பரந்தன் கமத்திலைநிண்டு தானே இந்தக்காச்சல் வந்தது. நீங்கள் இப்ப ஒரு பத்து ரூபா தந்தா திருப்பித்தரமாட்டானே இல்லை இனி உங்கடை கமத்துக்குப்போக மாட்டானே? காச்சல் வந்து எலும்பும் தோலுமாய்ப்போட்டான் நயினர்!... காசுபெரிசோ... மனிசர்பெரிசோ?

தன: இங்கை பார் பொன்னி... அதெல்லாம் கிடக்கட்டும் இதுபணவிசயம் சும்மா தரச் சரிப்படாது. ஏதேன்

அடைவு கிடைவு கிடந்தால் தா. பணம் தாறேன் அல்லது வந்த வழியைப்பார்த்துபோ. எனக்கு எத்தனையோ வேலேகிடக்கு உன்னோடை கதைச்சுக் கொண்டிருக்க நேரமில்லே.

பொன் : அதென்ன நயினர் அப்பிடித் தூக்கி எறிஞ்சு பேசிறியள் ஒரு பத்துருபாவுக்கு எங்களை நம்பமாட்டியளே. அடைவுவைக்க என்ரைகாதிலை கழுத்திலை என்ன கிடக்கு நாங்கள் இருக்கிற குடில்கூட மேயாமல் ஒழுகுது அதை மேயக்கூடக் காசில்லே நயினருக்குத்தானே என்ரை பொடியன் நல்லான் அவன்ரை தகப்பன் காத்தான் எல்லாரும் ஓடாய் உழைச்சுத்தந்தினம்.

தன: என்ன? சும்மா உழைச்சனீங்களே. கூலி கூலியாய் பணம் தரவில்லேயா நான்.

பொன்: ஆர் நயினர் வாங்கையில்லே எண்டு சொன்னது? மற்றவர்கள் தாற கூலியில் பாதிதந்தாலும் வாங்கிக் கொண்டுதான் வந்தான்கள். எங்கடைவேலேயும் உங்கடைகூலியும் வெறும் காசளவிலே இல்லே எண்டு நினைச்சுத்தான் வாங்கினேம் ஆனா .. இப்ப அந்த அளவுக்குத்தான் நீங்கபேசிறியள ஒரு பத்து ருபா தர மாட்டேன் என்கிறியலே.

தன: போடி! போ!! என்னோடைநின்று அலட்டாதை உனக்குக் காசு தர முடியாது. உங்கடை மாய்மாலப் எனக்குத் தெரியாதென்று நினேக்கிருய் நல்லான் குடியேற்றத்திட்டத்திலேகாணிவேணும் என்று எழுதிப்போட்டானும் அந்தச்சுப்பிரமணிய வாத்திதான் எழுதிக் கொடுத்தாராம் அந்த வாத்தியார் ஊர்ப்பொதுத் தொண்டு செய்கிறவராச்சே அவரட்டைப் போய்ப்பணத்தை வாங்குறதுதானே. என்னட்டை ஏன் நிற்கிருய்.

பொன்: உந்த விசயங்களெல்லாம் எனக்குத்தெரியாது நயினர்.

தன: தெரியாட்டில் இப்ப தெரிந்துகொள். இந்தமாதத் திலை நல்லானுக்குக் காணி கிடைக்குமென்று விதானையார் நேற்று எனக்குச் சொன்னவர். அவனுக்குக் காணிகிடைச்சால் பிறகும் என்ரை காணி யிலை வேலை செய்வானே. இப்ப காசைத்தந்துவிட்டு யாரட்டை வாங்குகிறது?

பொன்: என்னவோ நயினர் அவனும் பிள்ளைகுட்டிக்காரன் நெடுகக்குந்தியிருக்க நிலமில்லாமல் கஷ்டப்படுகிறன் தனக்கென்று கொஞ்சக்காணி இருந்தால் பாடுபட்டு பிழைச்சுவிடுவான் இனிமேல் வாறசங்கதியைப் பற்றிப்பேசி என்ன? ஆண்டாண்டாய் உழைச்சவன் படுத்த படுக்கையாகக்கிடக்கிறன் ஒருபத்து ரூபா வாங்கிவரச் சொன்னன் மனமில்லாட்டில் ஒரு கொத்து அரிசியாவது தாருங்கோ கஞ்சி காய்ச்சிக் குடிப்போம்.

தன: டேய்! சொக்கா பொன்னிக்கு ஐயாவைப் பற்றித் தெரியாது போலையிருக்கு ஒருக்கா என்னைப் பற்றிச் சொல்லு கிட்டினர் தூது போய் பாதி இராச்சியம் கேட்டு, ஐந்து நாடு கேட்டு, ஐந்து வீடு கேட்ட மாதிரியல்லோ பொன்னியும் கேட்கிறள். பத்துரூபா ஒரு கொத்து அரிசியிலை வந்து நிற்குது.

சொக்: பொன்னி உனக்கு எங்கடை ஐயாவைப் பற்றித் தெரியாது. இயமனட்டை சத்தியவான் உயிரைச் சாவித்திரி வாங்கிப்போட்டாள். கெட்டிக்காரி நீ ஐயா வட்டை ஒரு ரூபா ஒருபிடி அரிசி கூடவாங்க மாட்டாய் போ போ. வேறெங்கையாவது போய்ப் பார். ஐயா உங்களுக்குக்குடிக்க ஏதேனும்வேணுமோ சுறுட்டும் நூந்து போச்சு. இந்தாருங்கோ நெருப்

புப்பெட்டி. நல்லாகப் பத்தவையுங்கோ. (மெதுவாக) ராசா வருவாரெண்டு ரோசாப் பூ வாங்கி வைச்சேன். (தனபாலசிங்கம் சிரிக்கிறார்)

பொன்: என்ன நயினார் சிரிக்கிறியள். ஏழைகளுக்கு அழுகையும் கண்ணீரும் பணக்காறருக்குச்சிரிப்பும் வேடிக்கையும் நல்லான் உங்கடை பரந்தன் கம்பனியிலை உழைச்சு லொறி லொறியாக அனுப்பின நெல்லு உந்த வீட்டுக்கைகிடக்குது. அவனுக்கு ஒருவாய் கஞ்சிக்கு உதவவில்லை. அதுவும் வருத்தமாகக்கிடக்கும் இந்த நேரத்திலை உதவவில்லை. நீங்கள் பெரிய மனிசர். போகட்டும் நான் போறன். காலம் இப்பிடி நெடுக இருக்காது நயினார்.

தன: சொக்கா, பொன்னி சாபமல்லோ போடுறாள். எங்கடைவீடு மண்ணாய்ப் போயிடுமாம். மலையோடு எலி மோதுகுது பார்த்தாயா? (உரத்து) போடிவெளியே. இரக்கவந்த இடத்திலேயும் வாய்க்கொழுப்புப்போகவில்லை. ஏன் நிற்கிறாய்? போ என்றால் போ. (மறுபடியும் நாய் குரைக்கும் சத்தம்) அட சொக்கா, மறுபடியும் நாய் குலைக்குதடா. ஓடு ஓடு போய் ஆரென்று பாரடா. காவாலிப்பொடியள் வாசலிலை நிற்கிற பூக்கண்டுகளிலை பூக்களைப்பிடுங்கிப்பேடும் நாளைக்கு வெள்ளிக்கிழமை. கோயிலுக்குக் கொடுக்க பூ வேணும்.

சொக்: ஐயா, தபால் வந்திருக்குது போலை இருக்கு. போய் வாங்கிவாறன். நீ ஏன் நிற்கிறாய் பொன்னி?...வா. (மெதுவாக. பூக்கன்று மறைவில்) உந்தப்பூக்கண்டு மறைவிலை நில் பொன்னி. இந்தச்கறுமீ யட்டைக் காசுக்கு வந்தனியேநீ. இந்தா இரண்டுருபா. வைச்சுக்கொள். நல்லானைக் கவனமாகப்பார். குடிநீர் போட்டுக்கொடு. இந்த நேரத்திலை உதவாட்டில் என்ன மனிசர்? ஒண்டுக்கும் யோசியாதை. இது

இது என்ரை உழைப்பு... ஐயா தந்தகூலிக்காசு.

தன: அடே சொக்கா, என்ன அவளோடை கதைச்சுக் கொண்டு நிற்கிறுய்... தபாலை வாங்கிக்கொண்டு கெதியாக வாடா.

சொக்: இதோ வந்திட்டேனையா! தபால் கொழும்பிலை இருந்து வருகுது போலை இருக்கு. சின்ன அம்மா வின்ரை எழுத்து அப்படியே தெரியுது.

தன: ஐயோ கடவுளே, அவளுக்கு என்னவோ ஏதோ தெரியவில்லை பிள்ளைப் பெத்தவள். பிள்ளைக்கு ஏதேனும் சுகமில்லையோ? அட தடியா! நடந்து வாவேன். ஆனை போலை ஆடி அசைஞ்சல்லோ வாறுர்.

சொக்: இந்தாருங்கோ தபால். கவனமாகக் கிழியுங்கோ. உள்ளை இருக்கிற கடதாசியும் அவசரத்திலை கிழிந்திடப்போகுது.

தன: டேய், உனக்கு மனிதற்றை அவசரம் கூட தெரியாது. எந்தநேரமும் பகிடி. (தபாலைக்கிழிக்கும் சப்தம்) பிள்ளைதான் எழுதியிருக்கு.

சொக்: கொஞ்சம் பிலத்து வாசியுங்கோ. எனக்கும் சின்ன அம்மாவின்ரை சுகத்தை அறிய ஆசயாயிருக்கு.

தன: (வாசிக்கிறுர்)
அன்புள்ள ஐயா அறிவது,
இங்கே பெரிய கஷ்டமாக இருக்கிறது பிறந்த தம்பிக்கு அடிக்கடி சுகவீனம். பாலையே குடிக்குதில்லை. எனக்கும் பிள்ளைப்பெற்ற நாளிலிருந்து சுகவீனம் தான். என்ன செய்வது? ஊருக்கு வருவோமென்முல் உவ்விடம் என்னைக் கவனமாகப் பார்க்க யார்

இருக்கிறார்கள்? அம்மாவும் இல்லை. நீங்களோ தனி யாள்.

சொக்: பின்னை இந்தச் சின்னம்மாவின்ரை எழுத்தைப் பாருங்கோ ஐயா, சொக்கன் என்கிற ஒரு பிராணி இந்த வீட்டில் இருக்குது.

தன: டே டே கொஞ்சநேரம் வாயைப்பொத்திக்கொண் டிரடா. இதை வாசித்து முடிக்க விடடா.

சொக்: உம் வாசியுங்கோ! வாசியுங்கோ!!

தன: (தொடர்ந்து வாசிக்கிறார்) மாமியாராவது பார்ப் பாரென்றால் நீங்கள் பேசின சீதனத்தைச்சரியாகக் கொடுக்கவில்லையாம். எனக்குப் பிறகென்றே பல காணிகளையும் பணத்தையும் வைத்திருக்கிறீர்க ளாம். அதனால் அவர்கள் எங்கள் வீட்டிற்கு வர மாட்டாராம் டே. சொக்கா பார்த்தியாடா இந்த மாமிக்காரியை சண்டாளி! சூர்பனகை. மருமகள் பிள்ளைப் பெத்துக் கிடக்கிறாள். மாமிக்காரி சீதனம் பற்றிப் பேசிறாள்...

சொக்: அவகிடக்கட்டும் நீங்கள் தபாலை வாசியுங்கோ...

தன: (மீண்டும் தொடர்ந்து வாசிக்கிறார்.) இந்தக் குழந் தையினுடைய சாதகத்தைப் பார்ப்பித்தேன். கதிர் காமத்திலிருந்து திரும்பும் வழியில் ஒரு சுவாமியார் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் தான் சாதகத் தைப் பார்த்தார், என்னென்னவோ தோஷம் என் றெல்லாம் சொன்னார். எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை. கடைசியாக அவர் சொன்னது இதுதான், இந்தக்குழந்தை பிறந்தது இதன் அப்பாவுக்கு, அதா வது உங்களுக்கு துப்பரவாகக் கூடாதாம். அதற் காகவும் இந்தக்குழந்தையின் 'அரிட்டக்' குற்

றத்திற்காகவும் ஒரு வேல் வைத்துப்பூசை பண்ணி ஞல் மெத்த நல்லது என்றும் அவர் சொன்ஞர். முதலில் சன்னதி கோவிலுக்குப்போய் அன்னதானம் செய்து அங்கேயே வேல்வைத்துப் பூசை செய்து அதையே வீட்டில் வைப்பது நல்லது என்றும் சொன் ஞர். வசதியாஞல் கதிர்காமத்துஐயன் பேரால் மந் திரித்து நூல் கட்டவும் சொன்ஞர். வசதியாஞல் குழந்தைக்கும் எனக்கும் அவரே கட்டிவிடுவதாக வும் அந்தச் சுவாமியார்கூறிஞர். ஆஞல் இவர் விடவில்லே. இவர் டாக்குத்தர் ஒன்றையும் நம்ப மாட்டார்.

சொக்: ஐயா, சின்னம்மா எழுதியதைப்போல அவிச்சுக் கொடுங்கோ... நூல்கட்டுங்கோ.

தன: டே, டே. எனக்குக்தேகமெல்லாம் நடுங்குது.

கொஞ்சம் பொறடா இதைவாசித்துமுடிக்கவிடு.

சொக்: கடதாசியிலே இன்னும் மிச்சம் இருக்கே. வாசி யுங்கோ. வாசியுங்கோ.

தன: (தொடர்ந்து வாசிக்கிருர்) ஐயா, பணச்செலவைப் பாராமல் நான் எழுதியபடி செய்வது மிகவும் நல் லது. பணம் ஏனப்பா? உயிர்தானே பெரிது. அருச் சனே செய்வித்து விபூதி அனுப்பி வையுங்கள்.

இப்படிக்கு,
அன்புள்ள மகள்
பூமலர்

உம். ம் (பெருமூச்சு இந்தப்பிள்ளை ஏன்தான் பிறந்ததோ? பிறக்கிறதுக்கு முந்தியே ஆயிரம் ரூபா செலவை வைக்குதே. டே, சொக்கா அடுப்படிக்குப் போய் தண்ணீர் கொண்டுவாடா. எனக்கல்லோ கூடாதென்று அந்தச்சாமியார் சொன்னராம். ஐயோ கடவுளே, ஒருத்தருக்கும் தெரியாமல் எவ்வளவு பணம்வட்டிக்குக் கொடுத்து வைத்திருக்கிறேன் இந்த வயதிலே அவ்வளவையும் விட்டு விட்டு போறதென்றால்... அதை நான் சேர்க்க பட்ட பாடு உண்ணுமல் உடுக்காமல்...

சொக்: இந்தாருங்கோ ஐயா தண்ணீர்.

தன: (குடிக்கும் சத்தம்) டே. சொக்கா. ஓடடா ஓடிப் போய்த் தம்பையா அம்மானைக் கூட்டிவா. அவர் தான் இந்த அன்னதான வேலைகளுக்கெல்லாம் சரி.

சொக்: ஆர்? அந்தத்தரகர் தம்பையரே, இங்கை அடிக்கடி வந்து கோப்பிக்கு வளைவாரே. நான் போய்க்கூட்டி வாறேன் ஐயா, நீங்கள் கொஞ்ச நேரம்படுத்துத் தூங்குங்கோ. (தூரத்தில் போனபடி) பாவம், அந்த ஏழைக்கிழவிக்கு ஒரு பத்து ரூபா ஒரு கொத்து அரிசி கொடுக்காத முதலாளி சும்மா செலவழிக்கப் போருர் தரகர் தம்பையருக்கு யோகம் அடிக்குது. அடிக்கட்டும் அடிக்கட்டும். நமக்கென்ன.

## காட்சி - 2

பாத்திரங்கள்: 1 நல்லான்
2 பொன்னி

கதைநிகழும் இடம்: நல்லானின் குடிசை

---

நல்: (மலேரியாக் காய்ச்சலில் முணு முணுக்கிறுன்)

ஐயோ! ஆத்தை! ஆத்தை!! தண்ணி, தண்ணி!! நாக்கு வறளுது... தண்ணித்தாகமாய் இருக்குது... தண்ணி தா! ஆத்தை தண்ணி சுடு தண்ணி இல்லாட்டில் பச்சை தண்ணியாவது தாவன். ஐயோ தேகம் எல்லாம் நடுங்குது. கைகால் எல்லாம் உதறுது. ஊ... ஊ... ஆத்தை எங்கே போயிட்டாய். கூப்பிடுகிறது காதுக்குக் கேட்கையில்லையே.

தண்ணி தா ஆத்தை தண்ணி. ஒரு சிரட்டை தண்ணி... ஒரு சொட்டுத்தண்ணி இந்த நாக்கை நனைக்கத் தாவேன். இந்தப்பாழ் பட்டுப்போன மலேரியாக்காச்சல் ஏன் வந்தது? உழைச்சுப் பிழைச்சுப் தின்னுகிற எனக்கு ஏன் வந்தது? இரண்டு மூன்று நாளாய் கொல்லாமல் கொல்லுதே ஆத்தை. எங்கை போயிட்டாய் நீ... தண்ணி... தண்... ணி...

பொன்: (தூரத்திலிருந்து)வந்திட்டன்... மோனே.... வந்திட்டன். அடுப்பிலே சுடு தண்ணி இருக்குத்தாரன்.

நல்; ஆத்தை! எத்தினை தரம் கூப்பிடுறது? எங்கை போனனி. கத்திக் கத்தி தொண்டையே வறண்டு போச்சு. கெதியாகத் தா... என்னென்றாலும் தந்து தொலை.

பொன்; இந்தா, இந்தச் சுடுதண்ணியை குடி. நீ ஏன் என்னிலை கோபிக்கிறாய்... நான் அந்தப்பாழ்பட்டுப் போன உன்ரை முதலாளியட்டைப்போனேன். ஒரு பத்து ரூபா வாங்கலாமெண்டு தான் போனேன். இங்கை என்ன கிடக்கு. அடுப்பிலை சாம்பல் கிடக்கு குடிலுக்கை நீ கிடக்கிறாய். குடிநீர் வைச்சுத்தர ஒரு செம்புக் காசுமில்லை. அதுதான் அவரட்டைப் போனேன்.

நல் முதலாளி தந்தாரோ?

பொன்: தருவார்... தருவார்... நீ சுடலைக்குப் போகையுக்கை கூட வாய்க்கரிசி போட ஒருசிறங்கை அரிசி கூடத்தரமாட்டார். ஈன இரக்கமில்லாத மனுஷன் ஒருகொத்து அரிசி கேட்டேன். அதுகூட இல்லை என்றிட்டார்.

நல்: என்ன?... அப்பிடியா சொன்னார்?... (இருமுகிறான்) இந்தக்காச்சல் குறையட்டும். அவரைக்கேட்கிறேன் கேள்வி. உந்தப்பணம் ஆர்வீட்டுப்பணம்? உங்க வீடு ஆற்றை உழைப்பிலை கட்டினது? வீட்டுக்கை அடுக்கி வைச்சுக்கிற நெல்லு எவன்ரை உழைப்பிலை வந்தது? வீடு, பணம், கார், நெல்லு எல்லாம் என்ரை இரத்தம் என்ரை வேர்வை. என்ரை அப்பன்ரை மூச்சு. (இருமுகிறான்)

பொன்: சரி சரி சத்தம் போடாமல் படு. இளைக்கிறாய். இருமுகிறாய். நான் கடைக்குப்போய் ஒரு அரைக்கொத்தரிசியும் குடி நீருக்காக மருந்துச்சரக்கும் வாங்கி

வந்தநான். அதைப்போட்டுத்தந்துவிட்டுக்கஞ்சி யாவது காச்சவேணும்.

நல்: முதலாளி தரயில்லை என்கிறுயே. காசு எங்காலை?

பொன்: இந்த ஊரிலை தனபாலசிங்கம் முதலாளி போலை எல்லாரும் கெட்டுப்போச்சினமே. பணம் வந்த உடனே பவிசு காட்டுகினமே அவற்றை வேலை காறப்பொடியன் சொக்கன் இரண்டு ரூபா இரகசி யமாகத்தந்தான். உனக்குக் கஞ்சியாவது காய்ச்சிக் கொடுக்கச் சொல்லி. ஏழையளின்ரை கஷ்டம் ஏழை யளுக்குத்தான் தெரியுது.

நல்: சொக்கனே தந்தது. அவன் நல்லபொடியன் இந்தக் கடைகெட்ட முதலாளிக்கு அப்பிடி ஒரு வேலைக் காரப்பொடியன் வந்து வாச்சுதே. அதைச் சொல்லு

பொன்: நான் அடுப்பு மூட்டபோறேன். கொஞ்சம் தள்ளி பாயைப் போட்டுக்கொண்டு படு. இந்தக்குடிலுக்கை அடுப்பு மூட்டினுல் புகையாமண்டிப் போம். இருமும். கொஞ்சம் பெரிசாப்போடுவம் எண்டால் நீ கேட்டால்தானே. உன்ரைமனிசி பிள்ளையள் பாடு பரந்தனிலை எப்பிடி இருக்கோ. அதுகள் அங்கை தனிய இருந்து என்னபாடுபடுகுதுகளோ? அது சரி... நீ ஏதோ காணிவேணும்மெண்டு எழுதிப் டனியே.

நல்: ஓ, ஓ. உனக்கு ஆர் சொன்னது? அந்த வாத்தியார் இராசரத்தினம் என்னை ஒருநாள் கண்டு இங்கை பார் நல்லான், இப்ப இருக்கிற அரசாங்கம் காணி இல்லாதவைக்கெல்லாம் காணி கொடுக்குது ஒட்டி சுட்டானிலை இப்பகாணி கொடுககப்போகுது நேற்றுப்பேப்பரிலை வந்திருக்கு. நீயும் எழுதிப் போடேன், நல்லா உழைக்கக்கூடியவன் நீ. பெரும்

முதலாளியளுக்கு உழைச்சி ஒருபிரயோசனமும் இல்லே. உனக்கெண்டு கொஞ்சக்காணி இருந்து நீ பாடுபட்டால் உன்பிள்ளேக் குட்டிகளுக் கெல்லாம் நல்லது தானே எண்டு சொன்னர்.

பொன்: அந்த நல்ல மனுஷன் சொன்னது ஞாயம்தானே.

நல்: ஐயோ (இருமுகிறன்) தண்ணியைத்தாவேன் பேசக் கூட இளேக்குது. ஆ! இந்தக்காச்சல் எப்பிடியெல் லாம் தேகத்தை முறிக்குது. ஆத்தை! கெதியாகச் சுடு தண்ணீயாவது தாவேன். ஆ, என்னசொன் ஞன். ஓ! அந்த வாத்தியார் சொல்லிப்போட்டுச் சும்மா விடவில்லே. கையோடை கூட்டிக்கொண்டு போய் கடுதாசியிலே எல்லாம் கேட்டெழுதி என் கைவிரல் அடையாளத்தையும் குத்தச் செய்து அனுப்பி வைச்சார்.

பொன்: புண்ணியவான். அப்படியல்லோ மனிசர் இருக்க வேணும். பின்னே இருக்கிறரே முதலாளி தனபால சிங்கம்! தன-பால-சிங்கம்!!

நல்: தலேயெல்லாம் கொதிக்குது ஆத்தை. இதென்ன சுடு தண்ணியா? (குடிக்கிறன்) இப்ப என்னமாதிரி இருக்குது. நல்லா வேர்க்குது ஆத்தை. அந்த சுள காலே ஒருக்கா விசுக்கேன் ஆத்தை ஆ என் தேகத் திலே காத்துப்பட சாடையாய் நித்திரை வாற மாதிரி இருக்கு.

பொன்: சொன்ன கதையய் விட்டிட்டியே மோனே!

நல்: எங்கே விட்டனுன். பிறகு இரண்டு மாதம் கழிச்சு காணிக்கச்சேரிக்குக் கூப்பிட்டினம். உனக்கும் ஒரு காணித்துண்டு விழுந்திருக்கு எண்டு சொல்லிச்சினம் ஆ! அப்பா எனக்கு ஏற்பட்ட புழுகம்! நேரை வந்து அந்த இராசரத்தின வாத்தியாரை கும்பிட்டேன்.

ஒரு நெய்ப்போத்தல் கூடப் பரந்தினிலே இருந்து கொண்டு வந்து நீட்டினேன். அந்த வாத்தியார் போடா போ இதுக்கெல்லாம் கைக்கூலியா? இப்பிடி எண்டால் என்ரை கண்ணிலே கூட முழிக்கக்கூடாது என்று சொல்லி வாங்கமாட்டேன் என்றுவிட்டார். பிறகு நான் மண்டாடி கொடுத்தேன். ஆத்தை! அவர் என்ன செய்தார் தெரியுமோ? பத்து ரூபா யைக் கையுக்கை வைத்து உன்பிள்ளையளுக்கு ஏதா கிலும் வாங்கிக்கொடு என்று சொல்லிப்போட்டார் அவரல்லவோ மனிசன். அது சரி ஆறு மாசத்துக்கு முந்தின இந்தக்கதையை இப்ப ஏன் கேட்கிறாய்?

பொன்: தனபாலசிங்கம் முதலாளி உனக்குக் காணிவரப் போகுதெண்டு சொல்லித் துள்ளினரே ஒரு துள்ளு. காணிகட்டாயம் இந்தக்கிழமையுக்கை வரும் எண்டு விதானையார் சொன்னராம். இனி நீ தங் கடை கமத்திலே வேலை செய்ய மாட்டியாம். அது தான் காசு தர மாட்டேன் என்று சொல்லிப் போட்டார்.

நல்: கடவுளே, விதானையார் வாக்குப் பலிக்கட்டும். மற் றவைக்கு உழைச்சு உழைச்சு நான் கண்ட பலன் ஓலைச்குடிலும் ஒழுக்கு வீடும்தான். எனக்கெண்டு ஒரு காணி. அதிலே என்ரை உழைப்பு.....பாரேன் ஆத்தை...ஆ! அதை நினைக்க நெஞ்சு குளிருது.

பொன்: எல்லாத்துக்கும் கடவுள் கண் திறக்க வேணும் மோனே. நான் நாளைக்குச் சன்னதி கோயிலுக்குப் போய் உன்ரைபேரிலே ஒரு அருச்சினை செய்விச்சுப் போட்டுவரப்போறேன். நாளைக்கு வெள்ளிக்கிழமை நல்ல நாள். அந்தச் சொக்கர்ப் பொடியன் தந்த காசிலே ஒரு ஐம்பது சதம் கிடக்குது அங்கை சோத்துக்கு என்ன குறை. வெள்ளிக்கிழமை

மடத்திலை அவிச்சுப்போடுவினம். எனக்கு ஒரு பிடி சோறு போதும்.

நல்: என்னைத்தனியை விட்டிட்டு நீ போகப்போறியே. மடத்துச் சோத்தை நம்பிப்போறியே. அங்கை உனக்கு எங்கை கிடைக்கப்போகுது சோறு. தடியன்கள் சோம்பேறிகள் விட்டாடிகளுக்கல்லோ சோறு கிடைக்கும். ஏழைகளுக்கு பிச்சைக்காரர்களுக்கு நொண்டி முடங்களுக்கு சோறு போடுகினமே அங்கை. இந்தக்காச்சலும் எங்கடைபாடும் சன்னதி முருகனுக்குத் தெரியும் பேசாமல் கிட.

பொன்; அப்பிடி எல்லாம் கோயில் அலுவலிலை பேசப்படாது. பாவம். உந்தக்காச்சல் கெதியாக விட்டிடும் இந்தக் குடிநீரைப்போட்டுக் குடு என்று பரியாரி பொன்னர் சொன்னவர். எனக்கு நம்பிக்கை இருக்கு. நாளைக் குக்காச்சல் விட்டிடும். காலமே எழும்பிக்காக் கொத்து அரிசியிலை கஞ்சிகாச்சி வைக்கிறேன். நீ எடுத்துக்குடி நான்...

நல்: ஆத்தை, எல்லாம் நீ நினைக்கிறபடி முடிகிற காரியமே. இங்கை பார். காணிக்கு எழுதிப் போட்டு, காணிக்கச்சேரி எல்லாம் முடிஞ்சு, நேரை போய்க்கண்டு ஆறுமாசம் ஆச்சு. இண்டைக்கு வருகுது, நாளைக்கு வருகுது எண்டால் வந்தபாடில்லை. விதானையார் சொன்னமாதிரி இரண்டு மூன்டு நாளைக்குள் வந்தால்...

பொன்: சன்னதியான் முடிப்பான் தம்பி. அவன்தான் எங்கடை குலதெய்வம். நாலைந்து பெம்பிளைப் பிள்ளைகளுக்குப்பிறகு அவனைக் கையெடுத்துக் கும்பிட்டு உன்னைப்பெத்தேன்... உன்னைப்பெத்த அருமை எனக்கல்லோ தெரியும். அந்த தனபாலசிங்கம் முதலாளிக்கு எப்படித்தெரியும்? அவரைநினைக்கத்

தான் பத்திக்கொண்டு வருகுது. ஒரு பத்து ரூபா கேட்டு விட்டு ஒரு கொத்து அரிசியாவது தாருமேன் எண்டு கேட்டேன். சிரிக்கிறாரடா சிரிப்பு.

நல்: நீ அதைப் பார்த்துக் கொண்டு சும்மா வந்தியே. உன்ரைகுணமும் நீயும் நாசமாகப்போக என்று காறித்துப்பாதையன்.

பொன்: நானும் சும்மா வரல்லேயடா மோனே. காலம் இப்பிடி நெடுக இருக்காது நயினார். சிரிப்பவர்கள் அழுவார்கள் அழுதவர்க்ள் சிரிப்பார்கள் எண்டு சொல்லிப்போட்டுத்தான் வந்தனான்.

நல்: சரியாகத்தான் சொன்னாய் ஆத்தை காலமீ மாறும் சரி சரி குடிநீர் கொதிச்சுட்டுதே தாவள் குடிப் போம்.

## காட்சி - 3

பாத்திரங்கள்: 1 சொக்கன்
2 தனபாலசிங்கம்
3 தம்பையா

கதைநிகழும் இடம்: தனபாலசிங்கத்தின் வீடு

---

தன: ஒய், தம்பையரே, போன அலுவல் எப்பிடி? சாத்திரியைக் கண்டீரோ? என்ன சொன்னார்?

தம்: ஓமோம். சாத்திரி சரவணைக்குக் குறிப்பைக்காட்டினனான். சாதகத்தைப் பார்த்தால் பிள்ளைக்கு அரிட்டக் குற்றம் இருக்கென்றுதான் சாத்திரி சொல்லுறார்.

தன: அது எனக்குத்தெரியுங் காணும். அது தெரிஞ்சு தானே போன வெள்ளிக்கிழமை சிவன் கோயிலுக்குப் போய் அங்கே இருக்கிற நவக்கிரகங்களுக்குத் தண்ணி ஊத்துவிச்சி அரிச்சனையும் செய்விச்சுப் போட்டு வந்தனான். தபாலிலே பிள்ளைக்குக்கொஞ்சம் கடிமை எண்டு மகள் எழுதியிருக்கிறாள். அது கிடக்கட்டும். பிள்ளையின்ரை சாதகப்படி எனக்குக் கூடாது எண்டு ஒரு சாமியார் சொன்னாராம். ஒரு வேளை என்னைத் தட்டினாலும் தட்டிப் போடுமோ? அதுதான் காணும் பயமாய் இருக்கு கொஞ்சம் கவனமாகச் சாத்திரியைத் துளைத்துத் துளைத்துக் கேட்டுவரச்சொன்னனான். நான் போய் விட்டால்... இந்த வீடு வயல் தோட்டம் மாடுகன்று இதுகளை ஆர் பாக்கிறது? எத்தனை பேர் பணம் வாங்கிக் கொண்டு ஏமாத்தித் திரியிறான்கள்.

சொக்: ஐயாவுக்கு ஏதாவது குடிக்க...
(மெதுவாக) ராசா வருவாரெண்டு ஞேசாப்பூ வாங்கிவச்சேன்.

தண: இங்கைபார் தம்பையரே, இந்தத்தடியன் சொக்க னுக்கு எப்பபார்த்தாலும் பாட்டும் கூத்தும் கலியாணம் முடிக்கப்போருனும். நான் படுகிறபாடு பிள்ளைப்பெத்தவள் பாடு எப்பிடியோ?... பிள்ளை யின்ரைபாடு எப்பிடியோ? என்னைத்தான் கொண்டு போகப் போகுதோ? என்னைப்பற்றி ஆர் கவலைப் படுகிறது?

சொக்: (மெதுவாக) ஏழைகளைப்பற்றி யார்கவலைப்படு கிறது? அந்த நல்லானைப்பற்றி இவருக்குக் கவலை யில்லை இவரைப்பற்றி மற்றவர்கள் கவலைப்பட வேணுமாம் அடகடவுளே!

தம்: சொக்கா, என்னடா முணுமுணுக்கிருய் ஐயாவுக்கு ஏதேனும் கொண்டுவாவேன். அதோடை எனக்கும்.

தன: நல்ல வெய்யிலாயிருக்கு சொக்கா, தம்பையா அம்மானுக்கு ஒரு செம்பிலை நல்ல பச்சைத்தண்ணி யாக்கொடு. எனக்குக் கோயிலுக்குக் கொண்டு போக வைச்சிருக்கிறதிலை நல்லதாய் எடுத்து வைச் சேனே செவ்விளநீர் அதை வெட்டிக்கொண்டுவா.

தம்: சொக்கா, எனக்குப் பச்சைத் தண்ணிபோதும். இந்த வெய்யிலுக்குச் சுடுதண்ணி வயித்துக்கை போனுல் வேர்க்கும்.

சாக்: ஐயா, இளனியை எங்கே வச்சிருக்கிறியள் எல்லா இடமும் தேடியாச்சு. வந்து எடுத்துத் தாருங்கோ.

தண: ஒய் தம்பையரே கொஞ்சம் இரும் வாறேன் அதை எங்கேயோ ஒளிச்சுத்தான் வைச்சனுன் (போய்க்

கொண்டு) உந்தச் சொக்கன்ரை கண்ணிலை பட்டால் வெட்டிக்குடிச்சு விட்டு சாக்குப் போக்குச் சொல்லுவான்.

தம்: (மெதுவாக) இந்த பணக்காறற்றை கொழுப்பு அவருக்கு இளனியாம். எனக்குப் பச்சைத்தண்ணீயாம். அட, ஒரு வெறும் தேத்தண்ணி கொடு எண்டலது மனிசன் சொன்னனை? கறுமி. கோயிலுக்கு என்று பிடுங்கின இளனியிலை தனக்கெண்டு நல்லதா எடுத்துவைச்சிருக்கிறானமே. பாவி. இவங்களை இயமன் எட்டிப்பார்க்க மாட்டேன் என்கிறானே.

சொக்: என்ன தம்பையா அம்மான் தனிமையா இருந்து புறு புறுக்கிறியள். ஐயா வர முந்தி இந்தக்கோப்பியைக்குடியுங்கோ. செம்புக்கை தண்ணி இருக்கு. அது சும்மா இருக்கட்டும். அம்மான்! ஐயாவை நல்லாப் பயப்படுத்துங்கோ. அது இது என்று வெருட்டி நல்லாய்ச் செலவழிக்கப் பண்ணுங்கோ. அந்த நல்லான்ரை தாய்க்கு ஒரு கொத்து அரிசி கொடுக்காத ஐயா கதறக் கதறச் செலவழிக்க வேணும். அப்பதான் என்ரை மனம் ஆறும்.

தன: (வந்து கொண்டு) சொக்கா, எங்கையடா போட்டாய்? இந்தா, இளநீர் நல்லசெவ்விளநீர் அதைச் சரியா வெட்டி முழுவதையும் எனக்குத் தா. குடியாமல் தரமாட்டாய். உன்னைப்பற்றி எனக்குத்தெரியும் இதிலை இருந்து நான்பார்க்கக் கூடியதாக வெட்டு.

சொக்: (மெதுவாக) இந்த ஐயாவட்டை வேலைசெய்வதிலும் பார்க்கப் பிச்சை எடுத்துப் பிழைக்கலாம் கறுமம்! கறுமம்!!

தன: சரி தம்பையரே, விசயத்துக்கு வருவோம். சாதகத்தைப்பார்த்து அந்தச் சரவணமுத்துச் சாத்திரியார் என்ன சொன்னார்?

தம்: அதையேன் கேட்கிறியல். பிள்ளைக்கு அரிட்டக்குற்றம் மூன்று மாதம் இருக்காம். தப்பினால் பிள்ளையின்ரை தாயின்ரை தகப்பனைக் கொண்டு போய் விடுமாம்.

சொக்: அப்ப ஐயா பாடும் இங்காலேயோ அங்காலேயோ எண்டுதான் கிடக்கு... இந்தாருங்கோ இளனி. குடிச்சு விட்டு பேசுங்கோ.

தன: பாத்தியளே தம்பையரே, இயமன் வரமுந்தி இவன் என்னை அப்பிப் போடுவான். நீபோடா உள்ளே உந்தச் சாத்திரியும் அப்பிடியா சொல்லுகிறான்? கொழும்பாலே வந்த தபாலிலும் அப்பிடித்தான் கிடக்கு. என்ன கஸ்டகாலம்! ஏன்தான் இந்த அதிட்டம் கெட்ட பிள்ளை பிறந்ததோ? இந்தக் கெட்டகாலத்துக்கு ஏதாவது சாந்தி கீந்தி செய்யலாமோ என்று கேட்டு வராததையேன் தம்பையரே.

தம்: அதைக் கேளாமல் இந்த தம்பையன் விட்டுவிடுவானோ? கேட்டேன் முதலாளி.

தன: அப்பிடிச் சொல்லும். அதற்காகத் தானே உம்மட்டை எல்லா விஷயத்தையும் நான் விட்டு விடுவது? என்ன சொன்னார் சாத்திரியார்? நூல் கட்டச் சொன்னாரா? வேலாயுதம் வைத்துக் கும்பிடச் சொன்னாரா? கெதியாய்ச் சொல்லுங்காணும்.

தம்: அவர் சொன்னது கொஞ்சம் செலவுத் தானமான விஷயமாய் அல்லவோ இருக்கு.

தன: என்ன செலவு வந்தாலும் சரி. இது உயிர் போகிற காரியம். அதிலும் என்ரை உயிர் போகிற விஷயங்காணும், பணத்தை பார்த்தால் முடியுமே. காசிக்குப் போக சொன்னாலும் போறேன் காணும் கதிர்காமத்திலை காவடி எடுக்கச் சொன்னாலும் எடுக்கிறேன்காணும் விஷயத்தைச் சொல்லுமேன்.

தம்: அதொண்டுமில்லை. இது ஐஞ்ஞூறு ஆயிரம் ரூபா போற காரியமாக கிடக்குது.

தன: ஓய் நீட்டி முழக்காதையும் விஷயத்தை கக்கும். டேய் சொக்கா, எங்கையடா போட்டாய். தம்பையருக்கு ஒரு கோப்பி கொண்டு வந்து கொடு.

தம்: அதெல்லாம் வேண்டாம், சொக்கன் அப்பவே செம்புக்கை தண்ணி தந்திட்டான் வயிறு குளிர்ந்து போய் இருக்கு. ஆனால் நான் சொல்லப்போற வீஷயந்தான் உங்களுக்கு வயிற்றை எரிக்கப்போகுது ஒரு ஆயிரம் ரூபாயாவது செலவு வரும். ஆனால் செய்யாட்டில் உயிர் போய்விடுமாம்..மாரகந்தானும்

தன: என்ன! என்ன!! மாரகமாமோ? சொல்லித்தொலையுமேன். ஆயிர மென்ன! பத்தாயிரம் செலவழிக்கத் தயாரா யிருககிறன்.

சொக்: தம்பையா அம்மான்! இந்தாருங்கோ கோப்பி. அப்ப ஐயா பாடு கொஞ்சம் கஸ்டம் எண்டு தான் சாத்திரியார்...

தன: பொத்தடா வாயை. ஆள் சாகமுந்தியே பாடை கட்டு வாய் போலை இருக்கு இதை எல்லாம் போய் ஊரிலை பறைதட்டு பணம் வாங்கினவன் எல்லாம் ஆள் சாகட்டும் எண்டு பார்த்துக்கொண்டு இருப்பான்கள். போடா உள்ளே. தம்பையரே, அவன்

போட்டான். நீர் சொல்லும். என்ன செலவு வந்தாலும் முடிச்சுப் போடுறேன்.

தம்: உங்கடை மகளுக்கு நாகதோஷம் இருக்கெண்டு சாத்திரியார் சொல்லுகிறுர். எங்கடை அம்மன் கோவிலுக்கு ஒரு ஐஞ்சுதலை நாகபாம்பு வாகனம் செய்து கொடுத்திடச்சொன்ஞர். அதற்கு ஐஞ்ஞூறு ரூபாயாவது ஆகும்.

தன: அதுக்கென்ன.கோயிலுக்குத்தானே என்ரை பேரும் புளங்கும் வாகனத்திலை மாஞ்சேலை மாப்பாணர் தனபாலசிங்கத்தின் உபயம் என்று கொத்தி வைச்சிட்டால் அழியாது. ஆண்டாண்டாய் என்ரை பேரும் நிலைக்கும்.

தம்: அதோடை சன்னதி கோயிலுக்கு போய் கந்தனை நினைந்து அபிஷேகஞ்செய்து அஞ்சு மூட்டை அரிசியாவது அவிச்சுக்கொடுத்து அன்னதானஞ்செய்ய வேண்டுமாம். ஏழைகள், பிச்சைக்காரர், நொண்டிகள் வயிறுகுளிர்ந்து வாழ்த்த வேணுமாம்.

தன: ஏழைகள் வாழ்த்தித்தான் நாங்கள் வாழ வேணுமென்ருல் சரி சரி. அதையுந்தான் செய்து பார்த்து விடுவோம் தம்பையரே, நாளைக்கு வெள்ளிக்கிழமை இன்றைக்குப் போய் எங்கையாவது மூன்று மூட்டை அரிசி வாங்கிவாரும். வீட்டிலை கொஞ்சம் கிடக்கு அது சாப்பிடக்கூடிய கல்லில்லாத நல்ல அரிசி அவிச்சுக் கொடுக்கிறதுக்கு அதெல்லாம் சரிப்படாது. எங்கையாவது அரிசி குத்துகிற மில்காரரட்டை மலிவாகக் கிடைக்கும். இதெல்லாம் உமக்கு நான் சொல்லித்தான் தெரியவேண்டுமே.

தம்: அரிசி அலுவல் எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன் முதலாளி. காய் கறி சாமான்தான்...

தன: நாளைக்கு நாளை விடிய எழும்பிச் சுன்னாகம் சந்தைக்குப் போய் என்ரை காரிலே பூசணிக்காய் வாழைக்குழை, மரவள்ளிக்கிழங்கு எல்லாம் வாங்கிக் கொண்டு நேரா சன்னதி கோயிலுக்கு வாறேன். வண்டியிலே அரிசி, தட்டுமுட்டுச் சாமான் எல்லாத்தையும் கொண்டு அம்பலவி வரட்டும். நீரும் வண்டியிலே வாருமேன். கையோடை போய் வண்டிக்குச் சொல்லும்.

சொக்: அப்ப... நானும் கோயிலுக்கு...

தன: பாத்தியே தம்பையரே, ஒட்டி நின்று கேட்டிட்டுத் தானும் கோயிலுக்கு வரப்போறுளும். இங்கை வீட்டை ஆர் பார்க்கிறது. டேய், சொக்கா நீ வீட்டிலே நிற்கத்தான் வேணும். நாய் பட்டினியாக் கிடந்து சாகும். இந்தப் பக்கத்துப் பொடியன் எல்லாம் வெளியிலே நின்று பூக்களைத் தடியாலே தட்டிப் பிடுங்குதுகள்.

சொக்: (மெதுவாக) மனிசர் பட்டினி கிடக்கிறதைப்பார்க்காத ஐயா நாய் பட்டினி கிடக்குமெண்டு சொல்லுறூர். பணக்கார வீட்டு நாய்கூட ஏழைகளிலும் பார்க்க உசத்தி.

தன: தம்பையரே, அப்ப வெளிக்கிடுங்கோ. இந்தாரும் முன்னூறுரூபா. இதுக்கை சரிக்கட்டும். எதையும் நல்லதாய் வாங்கவேணும் என்று யோசியாதையும் பழுதான பூசணிக்காய், கசட்டை வாழைக்காய் என்றுலும் பரவாயில்லை. அரிசி கூடக்குறைஞ்ச விலையிலே பாரும். சும்மா அவிச்சுக் குடுக்கிறது தானே. பெரிய மனிதர் ஆர் சாப்பிடப் போகினம் ஏழை பாழைகள் தானேதின்னும். சரி வெளிக்கிடும் உதுக்கை கொமிசன் கிமிசன் அடிச்சிடாதையும். நீர் பாடுபடுகிறதுக்கு நான் ஐந்து ரூபா உமக்குக் கட்டாயம் தாறேன்.

தம்: அப்ப நான் வாறன். சொக்கனையும் என்னோடை விடுங்கோவேன் அம்பலவியின்ரை வண்டியின் முடிவைச் சொல்லி அனுப்புறேன்.

தன; சரி, சரி நீயும். தம்பைய ரோடை போய்விட்டு வா. எனக்கு இந்தச்செலவுகளை எல்லாம் நினைத்தால் தலையைச்சுத்துது. கொஞ்சம் உள்ளேபோய் படுத்தால் தான் குறையும். போகையுக்கை படலையைச் சாத்திக் கொழுக்கியாலை கொழுவி விட்டிட்டுப் போங்கோ. பூக்களைப் பொடியள் பிடுங்கிப்போடும். (உள்ளே போகிறார்)

சொக்: தம்பையா அம்மான்! சரியான ஆள்தான் நீங்கள் எங்கடை ஐயாவை நல்லாய்ப் பயப்படுத்திப் போட்டியள். ஒரு ஜெர்த்தரிசி அந்த ஏழைப் பொன்னிக்குக் கொடுக்க மாட்டேன் என்றவரி உயிர் போகப்போகுது என்ற உடனே மூட்டை மூட்டையாய் அன்னதானம் செய்யப் போறாராம். தனக்குத்தனக் கெண்டால் சுளகு படக்குப்படக் கெண்ணுமாம். சரியான அம்மானிடம் தான் எங்கடை ஐயா சிக்கி கொண்டார்.

தம்; டே, முட்டாள்! மெதுவாய்ப் பேசடா. மூன்று நாளாய் ஒரு உழைப்புமில்லை. ஒரு முப்பது ருபா இதுக்கை அடிச்சுப் போடுறன் பாறேன். பணக்காறரட்டைப்போய் பல்லை இளித்து மன்றாடினால் ஒரு சதமும் வாங்கமுடியாது. தந்தாலும் ஏதோ பிச்சை போடுறது போலை நினைப்பார்கள். அவர்கள் மனநிலை அறிந்து பயபடுத்த வேணும். அல்லது ஆசை காட்டி கிராமச்சங்கத்துக்கு மெம்பரா நிற்கச் செய்ய வேணும். அல்லாட்டி வேறை ஒரு பணக்

காரரோடை மோத விடவேண்டும். அப்பதான் எங்களுக்குப் பிழைப்பு. சொக்கா! இது ஒரு கலே... இது எல்லாருக்கும் வராது.

சொக்: (போய்க்கொண்டே) இந்தக்கலேயிலே தம்பையா அம்மான் ஒரு மன்னர்! இது சம்பந்தமாய் நீங்கள் ஒரு புத்தகம் எழுதிஞல் நல்லா விற்கும்.

## காட்சி - 4

பாத்திரங்கள்: 1 பௌசன்னி
2 தனபாலசிங்கம்
3 தம்பையா
4 சிவோகம் பண்டாரம்

கதைநிகழும் இடம்: செல்வச்சன்னதி கோவில் மடம்

---

சிவோ: (சங்கு ஊதும் சத்தம்) சிவோகம்! சச்சிதானந்தம் இந்தக்கட்டை மூன்று நாட்களாகப் பட்டினி வற்றுப்பளை அம்மனிடமிருந்து கால் நடையாக வருகுது அம்மையை வணங்கி விட்டு அப்பனைத் தரிசிக்க வந்திருக்கிறது.

தம்: அப்பனைத் தரிசித்தால் போகிறதுதானே கட்டைக்குப் பசியேது? தாகமேது?

தன: ஓய், தம்பையரே, எத்தனை நேரமாய் உந்தமடத்திலே சமைக்கிறீர்கள்? பசி வயிற்றைக் கிள்ளுது. கோயிலிலே பூசைமுடிஞ்சு ஆட்களும் வருகினம். போய்ப்பாரும் சாதம் கறி முடிந்தால் வந்து சொல்லும்.

தம்: ஓமோம். நான் போய்ப் பார்த்து வாறேன். நீங்கள் சுவாமி களோடை பேசிக் கொண்டிருங்கோ.

சிவோ: தம்பிகளுக்கு எந்த ஊரோ?

தன: என்னைத் தெரியாதவை இந்த யாழ்பாணைக்குடா நாட்டில் இருக்கினமே. மாஞ்சோலைப் பெரியவளவு தனபாலசிங்கமெண்டால்...

சிவோ: தெரியும் ஆண்டவனே தெரியும் தம்பியின்ரை தகப்பனர் உடையார் வேலை பார்த்தவரல்லவோ!

தன: ஒமோம் மாஞ்சோலை மாப்பாண உடையார் மகன் தனபாலசிங்கம் நான்தான்.

சிவோ: சிவோகம்! சச்சிதானந்தம்! தம்பிகளின் அன்ன தானந்தானே நடக்கிறது.

தன: ஒமோம் சுவாமிகளுக்கு எந்த ஊரோ?

சிவோ: இந்தக் கட்டைக்கு எந்த ஊரும் சொந்த ஊர்தான். பிறந்தது கீரிமலைப்பக்கம் வளர்ந்தது முல்லைத் தீவுப் பகுதியில் இப்போது இருப்பது அகப்பட்ட மடம், சத்திரம், பெற்றவர் வைத்தபெயர் மறந்து போய் விட்டது. இப்போது சிவோகம் சச்சிதானந்த சுவாமிகள் என்று பலர் கூப்பிடுகிறார்கள்.

தன: சுவாமிகளுக்கு கைரேகை, சாத்திரம், மந்திரம், ஏதாவது வருமோ?

சிவோ: மந்திரம் சிறிது கைவரும் கைரேகை பார்க்கக்கூடும் சோதிடம் எங்கள் பரம்பரை சொத்து.

தன: அப்பிடியெண்டால் சுவாமிகள்... ஒருபத்துநிமிஷம் சாதம் சமைக்கிற வரைக்கும், ஒரு சாதகம் பார்த்துச் சொல்லுங்கோ. எல்லாரும் என்னைப் பயப் படுத்திருன்கள். இருங்கோ வாறேன் காருக்குள்ளே ஒரு சாதகக் குறிப்பு இருக்கு.

சிவோ: (தனியே இருந்தபடி) ஆளைப் பார்த்தால் பெரிய பணக்காரப்புள்ளி போலே இருக்கு. அரிசி தண்டுகிற எனக்கு சாதகம் பார்க்க என்ன தெரியும்? எண்டாலும் வரட்டும். ஏதோ சமாளித்துத் தட்டக் கூடியதைத் தட்டிப்போடவேண்டும்.

தன; சுவாமி, இது என்ரை பேரப் பிள்ளையின்ரை சாதகம். கொஞ்சம் கவனமாகப்பாருங்கோ...

சிவோ: (ஏதோ முணு முணுத்தபடி) சிவோகம் சச்சிதானந்தம் ஏழாமிடத்திலே சனி மரணச்செவ்வாய் இது பொல்லாத சாதகம் அப்பனே.

தன: சுவாமிகளே, ஆருக்குக்கூடாது. குழந்தைக்கா? தாய்க்கா? தகப்பனுக்கா? அல்லது எனக்கா?

சிவோ: உமக்குத்தான் பொல்லாத காலம். மாரகசனி திசை

தன: அப்படித்தான் எல்லாரும் சொல்லுகினம். அதை நிவிர்த்திக்கத்தான் இண்டைக்கு அன்னதானம் செய்யக்கூடவந்தேன். என்னவோ சன்னதியான் புண்ணியத்தாலே ஒரு ஐஞ்சு வருசம் இருந்திட்டால் போதும், எத்தனை கொடுக்கல் வாங்கல் ஒரே கரைச்சல்.

தம்: (வந்துகொண்டே) ஐயா, சோறு கறி எல்லாம் ஆயத்தம். சனங்களெல்லாம் முதலாம் பந்திக்கு இருக்க அடிபிடி படுகுது வாருங்கோ சுறுக்கா. சுவாமிகளும் எழுந்தருளலாமே

சிவோ: அப்பனே பொறு இந்தக் கட்டை தம்பி தந்த சாதகத்தைப் பார்த்தது. தம்பிக்குப் பொல்லாத காலம். அற்கு ஆயுள்பலம் கொண்ட நூல் கட்ட வேணும். கதிர்காமத்தையன் சன்னதியில் என்னை

ஆட்கொண்ட பன்றிமலைச் சுவாமிகள் மந்திரித்து ஓதி எனக்காகத் தந்த ஆயுள்பலநூல் ஒன்று என் விபூதிப் பையுள் இருக்கிறது. எத்தனையோ பேர் மன்றாடிக்கேட்டும் நான் கொடுக்கவில்லை. தம்பி யைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. நான் அதைக்கட்டி விடுகிறேன். கேடாய் வரும் யமன் கூடக் கிட்ட வர மாட்டான். நிச்சயம். ஆனால்...

தன: ஆனால் என்னசுவாமி? சொல்லுங்கோ! கெதியா கச் சொல்லுங்கோ.

சிவோ: அதற்குக் கற்பூர தீபங் காட்டி ஐந்து நிமிஷம் செபிக்க வேணும். தட்சணையாக தங்கம் வெள்ளி ஏதாவது வைக்க வேண்டும். அல்லது உங்கள் மன விருப்பத்தின்படி நூறோ, ஐம்பதோ பத்தோ வைக்கலாம். நான் கட்டாயப் படுத்த வில்லை அப்பனே உன் விருப்பம் அது. ஆனாலும் கொடுக் கிறவரும் மனம்குளிர்ந்து கொடுக்கவேணும். வாங் கிறவரும் மனசந்தோஷமாய் வாங்கவேணும். அப் போதுதான் நூல் தற்செய்யும்.

தம்: நான் போய் கற்பூரம் வாங்கி வாறேன். (போய்க் கொண்டே மெதுவாக) சுவாமி சரியான ஆசாமி நான்தான் அவன்ரை பிழைப்பை ஏன் கெடுப்பான் பாடுபட்ட நல்லான்ரை தாய்க்குப் பத்து ரூபா கொடுக்க மாட்டாத கறுமி பத்துச் சதத்துக் கறுப்பு நூலுக்கு பத்தோ இருபதோ கொடுக்கப் போறார். கொடுக்கட்டும் நல்லாய்க் கொடுக்கட்டும்.

தன; சுவாமி, ஆயுள்பல நூலை வெளியிலை எடுங்கோ. தம்பையா கற்பூரத்தோடை வாறார்.

சிவோ: தம்பி இதுதான் ஆயுள்பலநூல் தட்சணையாக ஏதா வது வை. நான் மந்திரித்துக் கட்டி விடுகிறேன்.

தன: சுவாமி, தட்சணையாகப் பத்து ரூபா வைக்கிறேன். ஒரு மாதம் கழித்து என் வீட்டுக்கு வாருங்கோ. ஆயுள் நூல் வேலை செய்து பேரனும் நானும் சுகமாக இருந்தால் ஐம்பதோ அறுபதோ தாறேன். கெதியாக நூலைக்கட்டுங்கோ அன்னதானம் நான்தான் நடத்தவேணும். முதல் இலையிலை நான்தான் படைத்து அடியார்களைக் குப்பிடவேணும்.

சிவோ: தம்பி, பதருதை இந்தக்கட்டையும் அங்கேதான் உணவு கொள்ளப் போகிறது. இதற்கு உணவு தந்தால் ஆயிரம் அடியவர்களுக்கு அன்னம் அளித்தது போலாகும். (ஏதோ முணு முணுக்கிறார்) ஆண்டவனே, கையை நீட்டு. இதோ புனிதமான நூல். ஆயுளைக் காக்கும் நூல் ஆண்டவன் சன்னிதானத்திலை அவனை முன்னிட்டுக் கட்டுகிறேன். நீ வாழ்க! உன் பிள்ளை பேரன் மருமகள் எல்லாம் வாழ்க!

தன; ஓய் தம்பையரே, நான் மடத்துக்குப் போறேன். நீர் இந்தக் குறிப்பைக் கொண்டுபோய் அந்தக் காருக்குள்ளை வைத்து விட்டு வாரும் சிவோகம் சுவாமிகளே, தாங்களும்......

சிவோ: இதோ பின்னால் வந்து கொண்டிருக்கிறேன்.

தம்: ஐயா போயிட்டார். ஓம், சிவோகம் சுவாமி இந்தத் தரகர் தம்பையா ஏமாற்றும் கலையை எழுதாமல் படித்தனென் எண்டு நினைத்தேன். என்னைவிட நீ அதிகமாக அந்தக் கலையை படிச்சு விட்டாய் பத்துச் சத கறுப்பு கயிறுக்கு பத்து ரூபா தட்டிப் போட்டீரே. சரியான ஆளையா நீர் உம்மை எனக்குத் தெரியாதென்று நினையாதையும். வல்லைவெளிக் கொலை வழக்கிலை பத்து வரிசம் மறியலுக்குப் போன காசிப்பிள்ளையல்லவோ நீர். நல்லா நடிக்கப் பழகி விட்டீர். பேச்சும் பூச்சும் நல்ல சாமியார்க் கோலந்தான்.

சிவோ: ஆண்டவனே, ஆள்மாருட்டமாய் பேசாதீர். வார்த்தைகளைக் கொட்டாதீர் நாம்யாரோ? அவன் யாரோ?

தப்: போய்த்தொலை. கருமியின்ரை காசை ஆர் எமாத்திணுல் என்ன? நான் இந்தக் குறிப்பைக் காருக்குள் வைத்து விட்டு வாறேன். (சுவாமி மடம் நோக்கிப் போகிருர்) (தம்பையா காருக்குப்போகும் வழியில் பொன்னியைச் சந்திக்கிருர்) உதார் வாறது. பொன்னியே, என்ன இந்த பக்கம்?

பொன்: நயினுர், என்ரை மோனுக்குக் காச்சல்.

தம்: கேள்விப்பட்டேன். சொக்கன் எல்லாம் சொன்னவன் நீ தனபாலசிங்கம் வீட்டை போனதும் அவர் ஒரு கொத்தரிசி கூடத்தரமாட்டேன் எண்டதும் எனக்குத் தெரியும்.

பொன்: சொக்கர் இரகசியமாக இரண்டு ரூபா தந்தவர். அதிலைதான் இண்டைக்குச் சன்னதியான்டை வந்து மோனுக்கு நேந்து கர்ப்பூரம் கொளுத்தினனுன். இப்ப மடத்திலை ஆரோ அவிக்கினம் எண்டு சொல்லிச்சினம். ஒரு பிடி சோறு வாங்கித் தின்போம் எண்டு வாறேன். நயினுர், உனகுத் தெரிஞ்சவை எண்டால் கொஞ்சம் வாங்கித் தாருமேன்.

தப்: நீ இந்த மரத்தடியிலை நில். நான்போய் மடத்திலை சோறு எடுத்துக்கொண்டுவந்து தாறேன். (போகிறார்)

பொன்: என்ன இது, எங்கடை அம்பலவிக் கமக்காரன்ரை வண்டிலும் நிக்குது. எங்கடை ஊரவயின்ரை அவியல் போலைதான் இருக்கவேணும். அதுதான் தம்பையரும் உசாராய்ப் போருர்.

தன: ஓய் தம்பையரே, நல்ல ஆள் காணும் நீர். இருக்

கிற ஆட்களுக்குச் சோத்தைக் கறியைப் போடாமல் ஏதோ பெட்டியுக்கை அள்ளுகிறீர். ஆருக்குக் காணும் கொடுக்கப்போறீர்.

தம்: வெளியிலே ஒரு மனுஷி நிக்குது பாவம். அதுதான் கொடுத்து விட்டு வரலாமெண்டு...

தன: இங்கை தாரும். நான் கொடுக்கிறேன். நீர் இங்கை நிண்டு அலுவலைக் கவனியும்.

தம்: இல்லை. நான் கொடுத்துவிட்டு ஓடிவந்திடுறேன்,

தன: ஓய், உன்ரை புலுடா என்னட்டை அவியாது. இங்கை தாரும் நானே கொடுக்கிறேன் (போகிறார்)

தம்: (மெதுவாக) இந்தக்சறுமி கொடுத்தால் பொன்னி வாங்குகிறாளோ என்னவோ.

தன: அட, பொன்னியே, இந்தா சோறு.

பொன்: (மெதுவாக) இவரே அவிச்சுக் கொடுக்கிறார். அங்கை ஒரு கொத்து அரிசி தரமாட்டேன் எண்ட புண்ணியவான் புண்ணியம் சம்பாதிக்க இங்கை வந்திட்டாராக்கும். எத்தனை கொத்து அவியுது?

தன: பொன்னி, கோயிலிலை இண்டைக்கு என்றை அவியல். பிடி நீயும் கிண்டு விட்டு அவன் நல்லானுக்கும் கொண்டு போ.

பொன்: (உரத்து) பக்கத்து வீட்டிலை மாடாய் உழைச்சவன் பசி கிடக்க அவனுக்கு ஒரு கொத்து அரிசி குடுக்க மாட்டாத நீர் இங்கை வந்து அவிச்சுக் குடுக்கிறீர். இந்தப் பாவச்சோறு வேண்டாம். பொடியன் கேள்விப் பட்டால் கோவிப்பான். கடவுள்கூட கோபிப்பார்.

தன; கோயிலடியிலே கூடச் சண்டைபிடிக்க வந்திட்டியே. பல்லுக் கொட்டிப் போடுவன். நீ வாங்காமல் போனல் எனக்கு அதிலொண்டும் குறைச்சல் இல்லே. உள்ளுக்குள் எட்டிப்பார் எத்தனைபேர் சாப்பிடுகிருர்கள்.

பொன்; உம்மைப் பற்றித் தெரியாதவை சாப்பிடுகினம். வயிறு வெடிக்கச் சாப்பிட்டு வீட்டுப் பாவத்தைக் கட்டிக்கொள்ளட்டும். நான் வாறேன்.

தம்: என்ன ஐயா வந்த இடத்திலே கூடச்சண்டை.

தன; ஒய் உன்னைக்கட்டி வைச்சு உரிக்க வேணும். இவளுக்குச் சோறு குடுக்கச் சொல்லியே என்னை விட்டனி. இவள் வாயைக் காட்டுகிருள். ஏசுகிருள் சோறே வேண்டமென்கிருள்.

தம்: பொன்னி, இங்கைபார். கோயிலிலே யார் அவிச்சுக் கொடுத்தாலும் வாங்க வேணும். கொடுத்ததை வாங்க மாட்டேன் எண்டு சொன்னல் அது மிகப் பெரிய பாவம். ஐயா தாறதை வாங்கு.

பொன்; நயினர் ஏழைகள் எண்டால் மானம் ரோசம் இல்லாதவர்கள் அல்ல. ஒரு காலத்திலே இவர்கள் அடக்கி ஆண்டு இருக்கலாம். நாங்களும் மானத்தை விட்டு நாய்களைப்போல இவர்களைச் சுத்திச் சுத்தி வந்திருக்கலாம் இப்ப காலம் மாறி விட்டுது. உழைச்சால் கூலி அன்புக்குதான் அடிமை. எண்டாலும் நீர் சொல்லுரகிலும் ஒரு ஞாயம் இருக்கு. அவிச்சுக் குடுக்கிறதை வேண்டாம் எண்டு சொல்லப்படாது தான். சரி ஒரு பிடிசோறு அள்ளி வாய்க்குள் போடுகிறேன். ஆனல் ஒண்டு. பசி தீர அல்ல. பாவத்துக்குப் பயந்து மிச்ச சோறு எனக்கும் வேண்டாம். எனது மோனுக்கும் வேண்டாம்

தம்: ஐயா, நீங்க போங்கோ. அவள் பசியிலே ஏதாவது அலட்டுவாள்.

தன: சரி. சரி. சாப்பாடு கொடுத்து முடிஞ்சால் நீர் சாப்பிட்டு விட்டு வாரும். எனக்குத் தலே சுத்துது. வீட்டை போகப்போறேன், கொஞ்சம் சோறு எடுத்து வாரும். வீட்டிலே சாப்பிடுவம்.

தம்: ஐயா, பசியோடை போகப்படாது. சாப்பிட்டு விட்டு ஆறிப் போகலாம்.

தன: ஓய் தம்பையரே, நான் சொல்லுறதை நீர் செய்யும் எனக்கு உபதேசம் பண்ண வேண்டாம்.

தம்: சரி ஐயா. சோறு எடுத்துக்கொண்டு உடனே வந்திடுறேன்.

சிவோ: (ஏவறை விட்டபடியே) சிவோகம், சச்சிதானந்தம், ஆண்டவனே, அருமையான சாப்பாடு. இந்த கட்டையால் நடக்கக்கூட முடியவில்லே என்னேயும் தங்கள் வீடு வரை காரில் ஏற்றிக்கொண்டு சென்ருல் புண்ணியமுண்டு.

தன: போய் ஏறும் சுவாமி. சும்மா தொண தொண என்று அலட்டாதை. என்ன தம்பையரே நீரும் சாப்பிடவில்லேயா? சரி. வீட்டிலே சாப்பிடுவம். காரில் ஏறும். சுவாமிகளும் ஏறுங்கோ. (கார் போகும் சத்தம்)

## காட்சி - 5

பாத்திரங்கள்: 1 பொன்னி 4 சொக்கன்
2 தனபாலசிங்கம் 5 நல்லான்
3 தம்பையா 6 சிவோகம் சுவாமிகள்

கதை நிகழும் இடம்: மாஞ்சோலை தனபாலசிங்கத்தின் வீடு

---

தன: ஒய் தம்பையரே, ஒரு மயிரிழையிலை தப்பி விட்டோம். பிறேக் பிடிச்சேன், கார் கேட்கையில்லை தலையோடை வந்தது தலைப்பாகையோடை போச்சுது கண்சுத்தியது கைநடுங்கியது எனக்கேதெரியவில்லை. கார் எங்கே போகுதெண்டு. நாங்கள் தப்பியது ஆர் செய்த புண்ணியமோ? அட சொக்கா, கொஞ்சம் பால் கொண்டு வாவேன்.

தம்: எனக்கும் ஒரே பயமாய் போயிட்டுது ஐயா. கார் பூவரச மரத்தோடை முட்டப்போட்டுது. நல்ல காலம். நான் அப்பவே சாப்பிடுங்கோ எண்டால் கேட்டால் தானே பசியோடை கார் ஒட்டக்கூடாது

தன: ஒய் நான் எத்தனை நாள் கடும் பசியோடைகூடக் கார் ஓட்டினனுன். இண்டைக்கு... அவள் பேசின பேச்சு மனதை அறுத்தது. கிறுமியின்ரை சோறு எனக்கு வேண்டாம் என்று அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருந்தது. அதுதான்...

சொக்: ஐயா, பால் இந்தாருங்கோ.

சிவோ: இந்தக் கட்டைக்கும் ஏதாவது...

சொக்: ஊத்துறேன் ஊத்துறேன் வெறும் தேத்தண்ணியா வது ஊத்துறேன்.

சிவோ: சிவோகம் சச்சிதானந்தம் தம்பியின்ரை உயிரை என்னுடைய ஆயுள் மந்திரக் கயிறு என்னமாதிரிக் காப்பாற்றியது தெரியுமா? தம்பி, கயிறு வேலை செய்யத் தொடங்கி விட்டது. தம்பி அதைப் பத் திரமாகக் காப்பாற்ற வேண்டும்.

தம்: ஓய் சிவோகம் சுவாமி! சும்மா கயிறு விடாதையும். உம்முடைய பூர்வோத்தர மெல்லாத்தையும் ஐயா அறிந்தால் ஓட ஓட விரட்டுவார். அதற்குள் ஓடி வீடும். ஐயாவைக் காப்பாத்தியது இண்டைக்குச் செய்த அன்னதானம். என்ரை ஆலோசனை சாத்திரி யாற்றை வாய்ச் சொல்.

சொக்: இவ்வளவாவது ஐயாவைக் காப்பாத்தியது எது எண்டு நீங்கள் சொன்னதிலை இருந்து எனக்குத் தெரியும். அதை இப்ப சொல்லக்கூடாது.

தன: நீ ஒண்டும் சொல்ல வேண்டாம். அவள் பொன்னி கோயிலாலை வந்து விட்டால் இங்கை வரச்சொல் நல்லானையும் கூட்டி வரச் சொல். அவையளுக்கு...

தம்: என்ன செய்யப் போறியள்? காணியை விட்டு எழுப் பப் போறியளா? அல்லது இருக்கிற குடிலைப் பிடுங் கப் போறியளா? பாவம். (நாய் குரைக்கிறது)

தன: சொக்கா, நாய் குலைக்குது ஓடடா வாசலிலை போய்ப்பார்.

சொக்: தந்தி வந்திருக்கிறது ஐயா!

தன: இதென்னடா தந்தி? (மனதுக்குள் வாசித்து விட்டு) மகளும் மருமகனும் பேரக் குழந்தையோடை நாளைக்கு வருகினமாம். குழந்தைக்கு எப்படியோ? சன்னதியானே! நீ தான் காபாத்த வேணும்.

சிவோ: ஆயுள் மந்திரக் கயிறு... ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை தம்பி.

தன; ஒய் சுவாமி என்ரை கவலையும் நானும். நீர் முதலில் வெளியாலே போம். உம்முடைய மந்திரமும் கயிறும். அலட்டினீர் எண்டால் நாயைத்தான் உச்சுக் காட்டி...

சிவோ: (போய்க்கொண்டே) சிவோகம். சச்சிதானந்தம். இந்தக்கட்டை வரப்போகுது.

தய்; வர வேண்டாம் போம் இல்லை எண்டால் பத்து ரூபா கூடப் பறிபோகும். ஐயா, அந்த கள்ள சுவாமி போகட்டும். கவலையை விடுங்கோ. அன்ன தானம் முடிஞ்சுது. அடுத்து இந்த முறை கதிர் காமத்தையனிடம் வருவதாகக்காசு முடிஞ்சுவை யுங்கோ. இரண்டு பேரும் போய் கதிரைமலையில் ஏறி...

தன: ஒய் தம்பையரே, நீரும் நடவும்' கதிர்காமம்போக எனக்கு தெரியும், அடுத்தசெலவுக்கும் சுறண்டலுக்கும் வழிபார்க்கிறீரா? இனி எனக்கு யாரும் வேண்டாம் என் புத்தி தெளிந்துவிட்டது. சொக்கா சொக்கா, தம்பையருக்குப் படலையைத் திறந்துவிடு· போகட்டும் நான் நிம்மதியாய் கொஞ்ச நேரம் படுக்கப் போறேன்.

சொக்: இந்தா அப்ப தம்பையா அம்மான்...

தம்: சொக்கா, என் வேலை முடிஞ்சுபோச்சு வந்தகாரி யத்தைச் சரியாக நிறைவேற்றிப் போட்டேன். இந்தத் தனபாலசிங்கம் போனுல் இன்னெரு பூபால சிங்கம். தம்பையாவுக்கா பிழைக்கவழி தெரியாது. நான் வாறேன். (போகிருர்)

சொக்: ஐயா, அன்னதானம் குடுத்தாலும் குடுத்தார். மனம் சரி படலை. அந்த பொன்னி ஒரு பிடிசோத்தை அள்ளி வாயில் போட்டாள் ஐயா தப்புகிறது எப்படி? அதைச் சொல்ல வாயெடுத்தேன் சந்தர்ப்பம் சரியில்லை விட் டிட்டேன். எப் டியாவது சொல்லத்தான் போறேன். என்ன நாய் குரைக்குது தந்தி கிந்தி வருகுதோ? அல்லது... யார் பொன்னியும் நல்லானுமே. ஐயா உங்களைக் கூட்டிவரச் சொன்னுர். அதுக்குள்ளை நீங்களும் வந்திட்டியள். என்ன சங்கதி? ஐயா உங்களைக் கண்டால்...

நல்: ஏறிப் பாய்வாரே. பாயட்டும் இண்டைக்குத் தானே. இனிமேல் பாயமாட்டார். இண்டைக்குக் காணிக் கந்தோரிலை இருந்து கடதாசி வந்திருக்கு. குடியேற்றத் திட்டத்திலை காணி கிடைச்சிருக்கு. நாளைக்குப் போகப்போறேம் அதுதான் நயினரட்டைச் சொல்ல வந்தோம்.

பொன்; என்னதான் கோபமெண்டாலும் அவற்றை வளவுக்குள்ளை குடி இருக்கிறேம். அவரட்டை உழைச்சுப் பிழைச்சுதின்றவை நாங்கள். ஒருக்காச் சொல்லிப் போட்டுப் போகாட்டால் மனம் நிம்மதி அடையாது. அதோடை அண்டைக்கு நீ இரண்டு ரூபா தந்து உதவினியே. அதை மறக்கலாமோ? உனக்கும் சொல்லிப்போட்டுப் போகலாம் எண்டு வந்தோம்.

சொக்: இதென்ன கதை நானென்ன பெரிய மனிசனே. எனக்கும் சொல்ல.

பொன்: தனபாலசிங்க நயினரிலும் பார்க்க நீ பெரிய மனிசன்தான்.

தன: (உள்ளேயிருந்து வெளியே வந்தபடி) பொன்னி, சரியாச் சொன்னுய். என்னிலும் பார்க்கச் சொக்கன் பெரிய மனிஷன்தான். அவனிலும் பார்க்க நீங்கள் பெரியவர்கள்தான்.

சொக்: இல்லே ஐயா. இல்லே. நான் சாதாரண வேலேக்காரன். அவர்கள் கூலிப் பிழைப்புக்காரர்கள்.

தன: இல்லே. இப்ப நான் படுக்கும்போது ஒரு கனவு கண்டேன். தம்பையர் கதிரைமலேக்குப் போவோம் எண்டதால் ஏர்பட்ட கனவோ என்னவோ? உடம்பு புல்லரிச்சுப் போச்சு. அப்படியே நடக்கிற மாதிரி இருந்தது. சொக்கா நான் கதிரைமலேயில் ஏறுகிறேன். தண்ணீர் விடாயினுல் தவிக்கிறேன். தண்ணீர் தண்ணீர் எண்டு கதறுகிறேன். நீயும் என்னுடன் வந்தாய். பிரிந்துவிட்டாய். எனக்குக் கால்கள் தள்ளாடுகின்றன. நடக்க முடியவில்லே. சொக்கா, சொக்கா என்று அலறுகிறேன். உன்னேக் காணவில்லே. அப்போது சிவோகம் சுவாமி வருகிருர். என்னேக்கண்டும் காணுதவர் போலப் போகிருர். சுவாமி, சுவாமி என்று கூப்பிடுகிறேன். அவர் திருப்பியும் பார்க்கவில்லே. கொஞ்சத்தூரம் நடக்கிறேன். கண்கள் இருளுகின்றன. ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு அப்படியே நிற்கிறேன்.

சொக்: அப்பாலே என்ன நடந்தது ஐயா?

தன: தரகர் தம்பையா அந்த வழியாலே வாருர். நல்ல காலம் அவராவது எனக்கு உதவி செய்வார் என்று நினேக்கிறேன், அவரும் என்னே ஏறெடுத்துப் பார்க்கவில்லே. ஒருவரும் துணேயில்லே. முருகன்தான் துணே என நினேக்கின்றேன். முருகா, முருகா என்று சத்த

மிடுகிறேன். அப்போது நீ ஓடி வருகிருய். ஐயா, ஐயா என்று அழைத்தபடி ஓடி வருகிருய் என்னைக் கண்டதும் – என் நிலையைக் கண்டதும் நீபதறி விட்டாய். என்னை உன் மார்போடு சாத்தியபடி அம் மரத்தடியிலே இருந்து விட்டாய். என் வாய் தண்ணீர் தண்ணீர் என்று முணு முணுக்கிறது.

சொக்; அந்தப் புண்ணிய மலையிலே ஒருவராவது தண்ணீர் கொடுக்கவில்லையா ஐயா?

தன; அதைத்தான் சொல்ல வருகிறேன். அந்த மலையிலே யார் யாரையும் பார்க்கவில்லை ஒவ்வொருவரும் முருகா முருகா என்று ஏறிக் கொண்டிருக்கிருர்கள். தண்ணீர் தண்ணீர் என்று முணு முணுத்த என்வாய் இப்போது முருகா, முருகா என முணுமுணுக்கிறது. அப்போது பொன்னியும் நல்லானும் வருவது சாடைமாடையாகத் தெரிகிறது அவர்கள் என் தவிப்பைக் கண்டதும் துடி துடித்துப் போய்விட்டார்கள். நல்லான் ஒரு போத்தலுடன் அவசரம் அவசரமாக மேலே ஏறுகிருன் ஒரு தண்ணீர்ப்பந்தலில் தண்ணீர் வாங்குகிருன். கீழே இறங்கி ஓடி வருகிருன். வரும் வேகத்தில் எங்கே விழுந்து விடுவானே என்று பயமாக இருக்கிறது. அந்த தண்ணீரைப் பொன்னி வாங்கி நயினர், நயினர் என்று மெல்ல மெல்ல என்வாய்க்குள் ஊற்றுகிருள். நான் மெல்லெனக் கண்ணைத்திறக்கிறேன். நல்லான் தன் தாயை விட்டு விட்டு என்னை அணைத்தபடி மலைமீது கூட்டிச்செல்கிருன். சொக்கா நீ முருகா முருகாஎன்று கதறியபடி பொன்னியின் கைகளைப்பிடித்தபடி மலையின்மேல் ஏறுகிருய். மலைமேல் குளிர் காற்று வீசுகிறது. அது உடம்புக்கு இதமாக இருக்கிறது. இனிநான் மலையில் இருந்து இறங்குவேன். என் களைப்பெல்லாம் போய் விட்டது

களைப்பு மாத்திரமா போனது? எனது தீக்குணங்கள் எல்லாமே போய் விட்டன. என் நித்திரை கலைகிறது.

சொக்; ஐயா, உது வெறும் கனவல்ல. அப்பவே சொல்ல நினைச்சேன் பொன்னி தன் வாய்க்குள் போட்ட ஒரு பிடி சோறுதான் உங்களைக்காப்பாற்றியது நீங்கள் அவைகளை வாழ்த்தி அனுப்புங்கோ.

தன: எங்கையடா வாழ்த்தி அனுப்பிறது?

நல்: நாங்கள் நாளைக்குக் குடியேற்றத் திட்டத்திலை கிடைச்ச காணிக்குக் குடியேறப்போறம்.

தன; இப்ப நான் திருந்தி விட்டேன் ஏழைகள் அழுத கண்ணீர் கூறிய வாளொக்கும் எண்டு கண்டு கொண்டேன். இனிமேல் நீங்கள் ஏன் போகவேணும் சரி நல்லான் நீ போகப் பிரியமெண்டால் போ. ஒரு கொத்து அரிசி பொன்னி கேட்டாள். நான் அப்ப கொடுக்கவில்லை. இப்ப ஒரு கொத்தென்ன? ஒரு பறை ஒரு மூட்டை நெல்லுத் தாறேன். நல்லாய் உடம்பைத் தேற்றிக் கொண்டுபோ. பொன்னி, இனி என்னைக்கரூமி அது இது எண்டு சொல்லாதை. அன்னதானம் ஆயுள்கயிறு எல்லாம் வீண். ஏழைகளின் வயிறு தான் உண்மையான இடம் கண்டு பிடிச்சு விட்டேன் நீ வாழ்த்தினல் போதும். நான் இனி வாழ விரும்பவில்லை நாளைக்கு நீ வந்து என் மகளையும் பேரனையும் வாழ்த்து அதுபோதும் (அழுகிருர்)

பொன்: நீங்களேன் நயினர் அழுகிறியள் ஏதோ கெட்ட கனவு கண்டமாதிரி அதை நாங்கள் மறந்து விடுரேம். நாங்கள் மனங்குளிர வாழ்த்துகிரேம்.

தன: அட சொக்கா என்ரை பெட்டியுக்கை புதுசா ஒரு சோடி வேட்டி சால்வை இருக்கு எடுத்து வந்து நல்லானுக்குக் கொடு. பொன்னியின்றை மடியுக்கை மூன்று கொத்தரிசி இப்பவே போடு.

சொக்: அப்ப எனக்கொண்டும் இல்லையே ஐயா.

தன: உனக்குத்தான் கலியான ஆசை இருக்குதே. நான் சீக்கிரத்திலை ஒரு பெட்டையைப் பிடித்துக் கட்டி வைக்கிறேன் சீதனத்துக்குப் பயப்படாதை. நானே எல்லாம் கொடுக்கிறேன்.

சொக்: உண்மையிலே இப்பதான் நீங்கள் உண்மையான தனபாலசிங்கம். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

(நிறைவு)



நூல் நிலையம்
சன்மார்க்கசபை
1934



சிறந்த இலக்கியம் என்றால் பலரும் விரும்புவது, நெஞ்சில் நிலைப்பது, பயன்மிகக் கொண்டது என்பதைப் போலத்தான் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களும்.

சிறுவர்கள் முதல் விமர்சகர்கள்வரை இலக்கியத் துறைகள் அனைத்திலும் எழுதி வெற்றி கண்டவர். மணிவிழா கண்டும் இளமைத் துடிப்புடன் இன்னமும் எழுதி வருபவர். இவரின் சிறுகதைகள் ரஷ்ய, ஆங்கில, சிங்கள மொழிகளில் பெயர்க்கப்பட்டு வெளி வந்ததும், 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற நூல் மலேஷியப் பல்கலைக் கழகத்தில் ஒரு பாட நூலாக அங்கீகரிக்கப் பட்டுள்ளதுமே இவரின் ஆற்றலுக்கான சிறு துளிகளாகும்.

புதியவர்களை ஊக்குவிப்பதிலும் ஆற்றலுள்ளோரை அரவணைப்பதிலும் இரசிகமணிக்கு இணையாக யாரைச் சொல்வது...?

இலக்கியத்திற்கு அப்பால் அவருக்கு ஒரு வாழ்வு இருந்ததில்லை. இரசிகமணியின் இல்லத்தில் அவருடன் சிறிது நேரம் பேசினாலும் போதும் எத்தனையோ நூல்களை எழுதக்கூடிய 'விஷயங்களை' கருத்துக்களைப் பெறலாம். அந்தச் சிந்தனைகளையெல்லாம் அவர் எழுதாதது ஒரு இலக்கிய நட்டமே. அவையத்தனையும் நூலுருப்பெற்றாலே நாம் இரசிகமணியைப் பூரணமாகப் புரிந்து கொள்ள முடியும்.

—மு. கனகராஜன்